பக்கங்கள் 26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 03 புதன்கிழமை 19.11.2025 | அதிர்வு 111

## தம்பதியினர் சுட்டுக்கொலை

### தங்காலையில் பயங்கரம்



அம் பாந் தோட் டை மாவட்டம், தங்காலை – உனாக்குருவ பகுதியில் இடம்பெற்ற 04



# இனவாதத் தீயை மூட்ட இனியும் இடமளியோம்!

## திருகோணமலை சம்பவம் தொடர்பில் அறிக்கை கோருகின்றார் ஜனாதிபதி

“இலங்கையில் மீண்டும் இன வாதம் ஏற்படுவதற்கு நான் மட்டுமல்ல எந்தவொரு இலங்கை யரும் இனி அனுமதிக்கமாட்டார் கள். திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர் பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் முழுமையான அறிக்கை கோரி யுள்ளேன்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு 04

## ஜனாதிபதி - தமிழரசு இன்று சந்திப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியி னர் இன்று புதன்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித் துப் பேசவுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இன்று மதியம் ஒரு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடை பெறவுள்ளது என்று இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் இரா. சாணக்கியன் 05

## புத்தர் சிலை விவகாரத்துக்குத் தீர்வு காண ஜனாதிபதி தலைமையில் குழு வேண்டும்!

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதி பதி தலைமையில் தேசிய ஒருமைப் பாட்டுக் குழுவொன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற வரவு- செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார். 04





‘நுணலும் தன் வாயால் கெடும்’ என்பார்கள். அத்தகைய தகவல் ஒன்றை இன்று தரலாம் என எண்ணுகின்றேன்.

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெற்றமையை அடுத்து அவரது தேசிய மக்கள் சக்திக்கு நாடு முழுவதும் ஒரு செல்வாக்குக் கிளம்பியது. அந்தக் காற்றில் – அரசியல் சூறாவளியில் – மக்கள் முன் பிரபலம் இல்லாத, சமூகம் தெரியாத பலரும் நாடா ளுமன்றம் வரை அடித்துச் செல் லப்பட்டனர். அப்படி சொல்லப்பட்ட வர்களின் ஒருவர்தான் யாழ் மாவட்டத்தில் இருந்து எம்.பியான இளங்குமரன். எல்லோருக்கும் தெரிந்த விடயம் அது.

அவருக்கு பல சமயங்களி லும் நுனி நாக்கில்தான் 03



# மஹிந்தவைச் சந்தித்த இந்தியத் துணைத் தூதர்

## பிறந்தநாள் வாழ்த்தும் தெரிவிப்பு

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ஹர்விந்தர் சிங், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க் கிழமை காலை நடைபெற்றது.

இதன்போது இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ஹர்விந்தர் சிங் மற்றும் மஹிந்த ராஜபக்ஷ இடையில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் நேற்றைய 80 ஆவது பிறந்தநாளுக்கு, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சார்பில் இந்தியத் துணைத் தூதுவர் ஶ்ரீஹர்விந்தர் சிங், வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காக அரசால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் கடந்த செப்டெம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் தங்கியிருந்த கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்திலிருந்து செப்டெம்பர் 11 ஆம் திகதி வெளியேறி, அம்பாந்தோட்டை – தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்துக்குக் குடிபெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.







# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இரகசியம் பரகசியம்

சனி. 'மம நம...' வரை அப்படி அண்மைக் காலங்களில் அவர் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்ட சம்பவங்கள் பல உண்டு. ஆனால் அவையெல்லாம் அரசியல் விமர்சனங்கள், சிக்கல்கள். காட்டமான கண்டனங்களோடு அடங்கிவிடும்.

ஆனால், ஐந்து,ஆறு மாதங்களுக்கு முன்னர் நீதிமன்ற விவகாரம் ஒன்றில் அவர் அரசியல் விமர்சனம் செய்ய முயன்ற நடவடிக்கை – நீதிமன்றத்தில் நடந்த விடயத்தை அரசியலாக்க அவர் செய்த காரியம் – நீதிமன்ற செயற்பாடுகளின் தாற்பரியத்தை புரியாமல் அவர் மேற்கொண்ட செயல்பாடு – அவரைக் கொழும்பு ஹல்ஸ்ட்ரோபில் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் கொண்டு போய் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காக நிறுத்தி இருக்கின்றது.

அதுவும் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை மனுதாரராக கொண்ட காத்திரமான ஒரு வழக்குக்கு வழி செய்திருக்கின்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை அரசியல் ரீதியாக நொட்டுவதற்கு அவரது நீதிமன்றச் செயற்பாட்டை பகிரங்க வெளியில், அரசியல் விவகாரம் போல் கருதி, புரட்டிப் பேசி, விமர்சிக்க முற்பட்டமை–தான் முதல் கோணல் விடயம்.

குறைந்தபட்சம் தமக்கு இருக்கும் நாடாளுமன்ற சிறப்புரிமையை வைத்து, அங்கு – நாடாளுமன்றத்தில் – ஏதேனும் வாயால் வெட்டிப் பிடுங்கியிருந்தாலாவது தப்பிப் பிழைத்திருக்கலாம். வெளியில் இருக்கும் சுமந்திரனினால் ஒன்றும் செய்ய முடியாது.

ஆனால், நீதிமன்றுக்கு வெளியில் வந்து, நீதிமன்றையும் சேர்த்து விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு இப்போது அவர் இலக்காகி இருக்கிறார்.

இத்தகைய நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் நான் வழமையாகச் சுட்டுகின்ற வாசகத்தை குறிப்பிட விரும்புகிறேன். 'காலைச் சுற்றிய பாம்பு கொத்தாது விடாது'. அது போன்றதுதான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு.

ஏற்கனவே தமிழரசுக் கட்சி வழக்கு ஒன்று தொடர்பாக முன்னர் தமிழரசுக் கட்சியிலிருந்த 'கல்லாநிதி' பிரமுகர் தான் வெளியிடும் இலத்திரனியல் பத்திரிகையில் சுமந்திரனைக் கண்மூடித்தனமாக நோண்டப் போய் சிக்கலில் மாட்டினார். ஆனால் பின்னர் புத்திசாதுரியமாக நடந்து, பகிரங்க மன்னிப்புக் கோரி, அவர் சிக்கலை ஒருவாறு கழற்றிக் கொண்டார்.

ஆனால், இளங்குமரன் விடயத்தில் சிக்கலைக் கழற்ற அந்த மார்க்கம் சாத்தியமாக இருக்குமா என்று தெரியவில்லை.

தமிழகத்தில் நீண்ட காலம் தங்கியிருந்த ஈழத்தமிழ அகதியான சிறிலோகநாதன் என்பவர் கடந்த மே 29ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரக அனுசரணையில் – சென்னையில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் வழங்கிய தற்காலிக பயண அனுமதி பத்திரத்துடன் – நாடு திரும்பினார். அவரை குற்றப்புலனாய்வுத் துறையினர் பலாலி விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்தனர்.

அடுத்த நாள் 30ஆம் திகதி அவர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி, அவரைக் குறைந்த பட்சம் பிணையிலாவது விடுவிக்கும்படி நீண்ட நேரம் வாதாடினார்.

சம்பந்தப்பட்ட சிறிலோகநாதன் இலங்கை துணைத் தூதரகம் வழங்கிய பயண அனுமதி பத்திரத்தோடு, ஐ.நா. அகதிகளுக்கான தூதரகம் மூலம் நாடு திரும்புகின்றவர் என்பதால் அவரைக் கைது செய்வதோ, தடுத்து வைத்திருப்பதோ அரசமைப்புக்கு முரணானது என்று வாதிட்ட சுமந்திரன், குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் அவருக்குப் பிணை வழங்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றுக்கு இருப்பதையும் விவரித்து வாதாடி இருக்கிறார். அவை எல்லாம் நீதிமன்றப் பதிவுகளில் விவரமாகப் பதியப்பட்டுள்ளன.

எனினும், அவரைப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்து முடியும் வரை அவருக்கு பிணை அனுமதி அளிக்கக்கூடாது என்று பொலிஸ் தரப்பில் கடுமையாக வாதிடப்பட்டதால் அன்றைய தினத்தில் பிணை அனுமதி வழங்கப்படவில்லை.

அதன் பின்னர் இரண்டு நாள்கள் நீதிமன்ற விடுமுறை கழித்து, ஜூன் 2ஆம் திகதி பிறிதொரு சட்டத்தரணி மூலம் சிறிலோகநாதனுக்கு பிணை வழங்குக் கோரி பிணை மனு நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அச்சமயத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சிறிலோகநாதனுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அந்தப் பின்னணியில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

இந்த புதிய சட்டத்தரணியை ஒழுங்குபடுத்தி, பிணை அனுமதிக்கு ஆட்சேபனை தெரிவிக்காத ஏற்பாட்டைச் செய்த விவகாரத்தில் இளங்குமரனின் பங்களிப்பு – ஈடுபாடு – சம்பந்தம் – இருந்திருக்கக் கூடும்.

இவ்வளவுதான் நடந்தது.

பிணை வழங்கப்பட்ட பின்னர் வெளியில் ஊடகவியலாளர்களை சந்தித்த இளங்குமரன் அச்சமயத்தில் நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் கருத்துகளை வெளியிட்டுள்ளார் என்று சுமந்திரன் தமது மனுவில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

ஜூன் 30ஆம் திகதி சிறிலோகநாதனை பிணையி விடுவிக்க குற்றப் புலனாய்வுத் துறையினர் விரும்பினர் என்றும், ஆனால் அப்போது மேற்கொள்ளப்பட்ட 'அசுத்த அரசியல் விளையாட்டினால்' அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார் என்ற சாரப்பட இளங்குமரன் கூறினார் என்றும் சுமந்திரனின் வழக்கேடு கூறுகின்றது.

சுமந்திரனின் மனுவில் இளங்குமரனும் அவரது சகா கஜபாகுவும் நீதிமன்றத்தில் நடைபெற்ற விடயங்களை பின்வரும் விடயங்களை தவறாகவும் பிழையாகவும் வெளியில் பகிரங்கமாகக் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ. சிறிலோகநாதன் தொடர்பாக ஓர் அரசியல் 'விளையாட்டு' நீதிமன்றத்தில் நடத்தப்பட்டது. அவர் சட்டத்தின் அடிப்படையில், மே 30, 2025 அன்று வீட்டிற்குச் சென்றிருக்க வேண்டும்.

ஆ. சிறிலோகநாதனுக்காக ஓர் அரசியல்வாதி ஆஜராகி சிறிலோகநாதனை விளக்கமறியலில் வைக்கச் செய்யச் சதி செய்தார்.

இ. சிறிலோகநாதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி அவரை விளக்கமறியலில் வைக்கச் செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

ஈ. பொலிஸ் அவரை விடுவிக்க விரும்புவதாகக் கூறியது.

உ. ஆளும் கட்சியின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்க இது செய்யப்பட்டது.

– இவை இளங்குமரன் தரப்பினால் பகிரங்கமாகக் கூறப்பட்டவை என சுமந்திரன் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மனுவில் மேலும் –

1. சிறிலோகநாதனை விடுவிக்க விரும்புவதாக சி.ஐ.டி. 2025 மே 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவித்ததாக பொய்யாகக் குற்றம் சாட்டுவதன் மூலம், அவருக்கு மே 30, 2025 அன்று பிணை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவர் தேவையில்லாமல் 'ரிமாண்ட்' செய்யப்பட்டதற்கு 'அரசியல் விளையாட்டு' காரணம் என்றும், எப்படியோ நீதிவானும் சிறிலோகநாதனின் சட்டத்தரணியும் சேர்ந்து அவரை 'ரிமாண்ட்' செய்ய சதி செய்தனர் எனக் குற்றஞ்சாட்டுபவர்கள் பொதுமக்களுக்கு ஒரு செய்தியை தெளிவாக அனுப்புகிறார்கள்.

2. மே 30, 2025 அன்று நீதிமன்றத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பது குறித்து இவ்வளவு அப்பட்டமான பொய்யைச் சொன்னதன் மூலம், குற்றஞ்சாட்டுபவர்கள் நீதிமன்றம் மற்றும் சட்டத்தரணி மீது பழி சுமத்துவதன் மூலம், நீதி நிர்வாகத்தில் தெளிவாகத் தலையிட்டுள்ளனர். உண்மையில் முதல் நாளே பிணை வழங்குவதை எதிர்த்தது சி.ஐ.டிதான்.

3. இந்த நடவடிகை மல்லாகம் நீதிவான் முன் நடைபெறும் வழக்கின் நேர்த்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

– இப்படி தெரிவித்து இருக்கிறார் சுமந்திரன். இவை தொடர்பில் காணொலிப் பிரதிகள், அவற்றின் ஆங்கில மொழியாக்கம் போன்றவை எல்லாம் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களை விடுவிக்க இளங்குமரன் தரப்பு என்ன அணுகு முறையை – நீதிமன்ற வாதத்தை – வைக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை-2025
"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."
– சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)



# அநுர அரசாங்கத்தின் அடுத்த அதிரடி! எம்.பிக்களின் ஓய்வூதியமும் இரத்து!!

## சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்குரிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தேசிய அரச பேரவையின் 1971 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குவதற்காக 2025.06.16 அன்று இடம்பெற்ற



அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'வளமான நாடு- அழகான வாழ்க்கை' எனும் தொலைநோக்குக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து இலங்கையர்களுக்கும் அரசு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய, நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்களுடைய துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதிய உரித்தை இரத்துச் செய்யும் நோக்கில் நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை நீக்குவதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்துக்குச் சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகவும் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது." - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இனவாதத் தீயை...

அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் ஊழல் நடந்தால் அதற்கு எதிராகப் போராடலாம். ஜனநாயக மீறல்கள் இடம்பெற்றால் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தலாம். பொருளாதாரம் சரிந்தால் அதற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் நடத்தலாம். ஆனால், இவை எதுவும் நடக்கவில்லை. அதனால்தான் தோல்வி கண்ட தரப்புகள் இனவாத சூழ்நிலையை ஏற்படுத்த முற்படுகின்றன.

திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் முழுமையான அறிக்கை கோரியுள்ளேன். எமது நாட்டில் இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டேன். பௌத்த மக்களும் இடமளிக்க மாட்டார்கள். பொதுவாக அனைத்து இன மக்களும் இனவாதத்தை நிராகரிக்கின்றனர்.

எனவே, பழைய இனவாத நாடகங்கள் இனி இந்த நாட்டில் எடுபடாது. இனவாதத்தால் இனி அரசியல் வரலாற்றை எழுத முடியாது." - என்றார்.

### புத்தர் சிலை...

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியதாவது:-

"திருகோணமலை ஜயந்தி போதிராஜ விகாரையில் நடந்த சம்பவம் தேசிய பாதுகாப்புக்குச் சாதகமானதா? பாதிப்பானதா? 1951ஆம் ஆண்டில் அந்த விகாரை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2010 இல் பௌத்த விவகாரங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2014 இல் புனித பூமிக்கான உரித்து கிடைத்துள்ளது.

ஏதோவொரு பிரச்சினை உருவாகின்றது. அந்தப் பிரச்சினையில் புத்தர் சிலையைக் கொண்டு செல்லும் தரப்பாகப் பொலிஸார் மாற்றப்பட்டுள்ளனர். புத்தர் சிலையை அகற்றுவதற்குப் பொலிஸாருக்கு உள்ள உரிமை என்ன? தவறைப் புரிந்துகொண்டு மீண்டும் அந்தப் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்துள்ளனர்.

பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமை தொடர்பில் நாம் அனைவரும் அறிவோம். அதேபோன்று மற்றைய மதங்களுக்கு வழங்கப்படும் உரிய கௌரவம் மற்றும் இடம் என்பன வழங்கப்பட வேண்டும்.

எனவே, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவொன்றை அமைக்க வேண்டும். ஜனாதிபதி அதனைச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் போது இதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துப் பலனில்லை. நாட்டுத் தலைவர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

இது சாதாரண பிரச்சினையல்ல என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனைய மதங்களில் இது போன்ற பிரச்சினைகள் வரும் போதும் நாங்கள் இவ்வாறு செயற்பட்டோம். சிறந்த பௌத்தர்கள் போன்றே நடந்து கொண்டோம். ஆனால், தற்போது சில குழுக்கள் பௌத்த மதத்தைத் திரிபுப்படுத்துகின்றன.

இந்தநிலைமையில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் ஜனாதிபதிக்குக் கூறுகின்றேன்.

ஜனாதிபதி தீயை உருவாக்கக் கூடாது. தீயை அணைப்பதற்கே நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாப்புப் பிரிவினர் இதுபோன்ற விடயங்களில் தலையிடாது. நாட்டின் ஜனாதிபதி இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிச் செல்லாத வகையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமரபுர பீடத்தின் மகாநாயக்க தேரர் உள்ளிட்ட மகாநாயக்க தேரர் மற்றும் இந்தப் பிரச்சினையில் தொடர்புபட்டுள்ள சகல குழுக்களையும் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள். பிரச்சினையில் இருந்து நழுவிச் செல்வது தலைமைத்துவம் அல்ல. இதனைத் தீர்க்க வேண்டும். நாட்டில் பல இடங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆகவே, இவற்றுக்கு முறையான தீர்ப்புகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை, உண்மையான மக்கள் இறையாண்மை, நாட்டின் சுதந்திரத்தைப் பலப்படுத்தும் சாதகமான செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சி கூட ஒத்துழைப்பை வழங்கத் தயார். ஆனால், விகாரைகளுக்குள் சென்று செயற்படுவதற்குப் பொலிஸாருக்கு உரிமை கிடையாது. இதனால் இந்தப் பிரச்சினையில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்.

### தம்பதியினர்...

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் தம்பதியினர் உயிரிழந்தனர்.

நேற்று மாலை 6.15 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

9 மி.மீ. ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

68 மற்றும் 59 வயதுடைய கணவன் மற்றும் மனைவியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சில வீதிகளைத் திறந்து வைத்துவிட்டு அவற்றை ‘நிலம் விடுவிப்பு’ என விளம்பரப்படுத்தும் அரசு

## நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு




“இன்றளவிலும் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் காணிகள் அரசு விடுவிக்கவில்லை. அரசு வழக்கமாகச் சில வீதிகளைத் திறந்து வைத்துவிட்டு, அவற்றை ‘நிலம் விடுவிப்பு’ என விளம்பரப்படுத்துகின்றது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பாதீட்டில் பாதுகாப்புத்துறைக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடு காணப்படுகின்றது. ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் காணி உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் ஆன பின்பும் பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கின்றது. ஆனால், அதே நேரத்தில், கல்வி, சுகாதாரம் மற்றும் மக்கள் நலன் போன்ற முக்கிய துறைகள் புறக்கணிக்கப்படுகின்றன,

முழு நாட்டில் வறுமையால் பாதிக்கப்பட்ட மக்கள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், நாட்டில் உள்ள முதியோர் ஆகியோரின் தேவைகளை அரசு கவனத்தில் எடுக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பாடசாலைகளில் இன்றளவிலும் பிள்ளைகள் தற்காலிக கூடங்களில் கல்வி கற்கின்றனர்.

பிரதமர் ஹரிணி எதிர்க்கட்சியில் இருந்த காலத்திலும் கல்விக்குக் குறைந்தது 6 வீத நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் தற்போது இன்று அவரே ஆட்சியில் இருந்தாலும் கல்வித்துறைக்கான நிதி பாதுகாப்புத்துறையை ஒப்பிடும் வகையில் இல்லை. இது ஆட்சியின் முன்னுரிமைகளில் ஒரு முரண்பாடாகும்.

வடக்கு நிலம் விடுவிப்பு பற்றிய தவறான தகவல்களை அரசு வெளியிடுகின்றது.

வடக்கு மாகாணத்தில் நிலம் விடுவிக்கப்பட்டதாக அரசு கூறுவது தவறானது. அரசு வழக்கமாக சில வீதிகளைத் திறந்து வைத்துவிட்டு, அவற்றை ‘நிலம் விடுவிப்பு’ என விளம்பரப்படுத்துகின்றது. ஆனால், வீதியின் இருபுற நிலங்களும் இன்னும் பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வட பகுதியில் உள்ள வயவிளான் பாடசாலை மாணவர்கள் இன்று வரை ஒரு விளையாட்டு மைதானத்தில் உள்ள தற்காலிக கூடாரத்தில் கல்வி கற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரம் மீண்டும் எழுந்துள்ளது.

2005 ஆம் ஆண்டு திருகோணமலையில் அனுமதியின்றி புத்தர் சிலை நிறுவப்பட்ட விவகாரம் குறித்து 20 ஆண்டுகளுக்கு முன் மக்களால் மற்றும் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட அதே கேள்வி இன்னும் தீர்க்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களின் நில உரிமைகள் தொடர்ந்து எதிர்மறை நடவடிக்கைகளுக்கு உள்ளாகின்றன. எமது நிலத்தைப் பாதுகாக்க முடியாத நிலை இன்றளவிலும் தொடர்கின்றது.

பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டைத் திருதியமைத்து, கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற மக்கள் நலத்துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.” – என்றார்.

# தெற்கில் ஊசி மூலம் உடலில் போதைப்பொருளை ஏற்றும் வியாபாரத்தில் ஈடுபட்ட கும்பல் சிக்கியது!

தென்னிலங்கையில் ஊசி மூலம் உடலில் போதைப்பொருளை ஏற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்று மேல் மாகாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கும்பல் நீண்ட காலமாக ஊசி மூலம் உடலில் போதைப் பொருளை ஏற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தெமட்டகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஜனாதிபதி - தமிழரசு...**

நேற்றிரவு “முரசு“ இணைய நாளிதழிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுடன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிற பிரச்சினைகள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் பேசப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேசுவது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி இறுதியாகக் கூட்டிய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, சந்திப்புக்கான நேரம் கோரி ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கட்சியின் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

பேச்சுக்கான நல்லெண்ண சமிக்ஞையாக வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதில்லை என்றும் அந்தக் கட்சி தீர்மானித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் ஆதாரங்கள் அழிக்கப்பட்டாலும் விரைவில் உண்மையை வெளிக்கொணர்வோம்!

## நாடாளுமன்றில் ஜனாதிபதி திட்டவட்டம்



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஆதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் படுகொலைக்குப் பின்னால் உள்ள உண்மையை வெளிக்கொணர்வதை அரசைத் தடுக்காது."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஆதாரங்களின் முக்கிய அறிக்கைகளின் பக்கங்கள் கிழித்தெறியப்பட்டுள்ளன. ஆனால், அரசு ஏற்கனவே புதிய ஆதாரங்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளது. ஆதாரங்கள் அழிக்கப்பட்டாலும் உண்மையை வெளிக்கொணர்வோம்.

சி.ஐ.டி. தலைவர் ஷானி அபேசேகர மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன ஆகியோர் ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையை வெளிக்கொணர இரவும் பகலும் உழைத்து வருகின்றனர். அவர்கள் விரைவில் உண்மையை வெளிப்படுத்துவார்கள்." – என்றார்.

# 703 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடலோரக் காவல் படையினர் 703 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள போதைப் பொருளைப் பறிமுதல் செய்துள்ளது.

இலங்கைக் கடலோரக் காவல் படை, பேலியகொட குற்றப் பிரிவினருடன் இணைந்து, பெந்தர கடல் பகுதியில் நேற்று மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 43 கிலோ கிராம் மற்றும் 968 கிராம் மெத்தம் பேட்டமைனைக் கைப்பற்றியுள்ளது.



பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கடலோர ரோந்துப் படகுகளை அனுப்பிய இலங்கைக் கடலோரக் காவல் படையினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காகப் பேலியகொட குற்றப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# இலங்கையில் பதிவாகின 6,700 இணையக் குற்றங்கள்

இலங்கையில் கடந்த 11 மாதங்களில் 6,700இற்கும் அதிகமான இணையக் குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

இதன்படி பதிவான வழக்குகளில் 35 வழக்குகள் சிறுவர்களை உள்ளடக்கியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பொறியியலாளர் சாருக்க தமுனுபொல ஆங்கில ஊடகமொன்றுக்குக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிறுவர்களை இணையக் குற்றங்கள் தொடர்பான அபாயங்களிலிருந்து பாதுகாக்க வலுவான நடவடிக்கைகள் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# திருமலை சம்பவத்தை வைத்து அரசியல் நடத்த இடமளியோம்!

## அமைச்சர் நளிந்த சூளுரை



“திருகோணமலை சம்பவத்தை அடிப் படையாகக் கொண்டு அரசியல் இலாபம் தேடுவதற்குச் சில குழுக்கள் முற்பட லாம். அவ்வாறான சம்பவங்களுக்கு இட மளிக்கப்படமாட்டாது.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சா ளரும் அமைச்சருமான நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

“சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற் குரிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. அதற்கமைய அவர்கள் செயற்படுவார் கள்.

எமது நாட்டில் புத்தர் சிலைக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதால் பாரிய குழப்பங் கள் ஏற்பட்ட சம்பவங்களும் உள்ளன. எனவேதான், புத்தர் சிலை அங்கிருந்து அறக்கப்பட்டது. பின்னர் மீள வைக்கப் பட்டது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவே பொலிஸார் தலையிட்டனர்.

திருகோணமலை சம்பவத்தை அடிப் படையாகக் கொண்டு தமது அரசியல் கனவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு, மக்களைத் திரட்டுவதற்குச் சில குழுக்கள் முற்படலாம். அவ்வாறான விடயங்க ளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.” – என்றார்.

# எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்துள்ள பேரணியில் பங்கேற்கிறார் மஹிந்த

எதிர்வரும் 21ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமை யிலான எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்துள்ள பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொள்ள உள்ளார்.

தனது பிறந்தநாளை முன்னிட்டு ஆசீர்வாதம் பெறுவதற்காகக் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில், தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக இந்த பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பங்கேற்கமாட்டார் என நாமல் ராஜ பக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பி டத்தக்கது.





# நாட்டை அண்மித்து உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம்

நாட்டை அண்மித்து காணப்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது நாட்டைவிட்டு விலகிச் செல்வ தால், நாட்டின் வானிலையில் அதன் தாக்கம் படிப்படியாகக் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், எதிர்வரும் நவம்பர் 22ஆம் திகதியளவில் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் புதிய காற்றழுத் தத் தாழ்வு மண்டலமொன்று உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய இந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமானது மேலும் வலு வடைந்து, இலங்கையின் வடக்குக் கடற் பிராந்தியத்தை அண்மித்து பயணிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொதுமக்கள் அவ தானமாகச் செயற்படுமாறு வளி மண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தி யுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எம்.பிக்கள் ஓய்வூதியம் ‘அவுட்’!

ஐந்து வருடங்களுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் அவர்களின் துணைகளுக்கும் ஓய்வூதியம் வழங்கும் முறைமையை அடியோடு ரத்துச் செய்யப் போவதாக அறிவித்திருந்த தேசிய மக்கள் சக்தி அரசு, அதனை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப் போகின்றது என்பது உறுதியாகி இருக்கிறது.

இது தொடர்பான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் முன் வைப்பதற்கு அமைச்சரவை தற்போது அனுமதி வழங்கி இருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தொடர்பான அரசின் முடிவை நேற்று அறிவித்துள்ளார்.

கடந்த தேர்தல்களின் போது தேசிய மக்கள் சக்தி முன்வைத்த அதனுடைய தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அரச கொள்கைப் பிரகடனம் ஆகியவற்றுக்கு அமையவே, கடந்த 55 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் நாடாளுமன்ற ஓய்வூதிய சட்டத்தை அடியோடு நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், அந்தச் சட்ட மூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி நிலைமையின்படி 330 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், 182 நாடாளுமன்ற உறுப்பினர்களின் துணைகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தங்கி இருந்த எழுவரும் மாதாந்தம் சுமார் மூன்றரை கோடி ரூபா ஓய்வூதிய தொகையை பெற்று வந்தனர்.

இந்த ஓய்வூதியக் கொடுப்பனவை வெட்டும் அரசின் முடிவுக்கு எதிராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டு அமைப்பு ஐ.நா வரை முறையிட்டும் கூட பலன் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஓய்வூதியக் கொடுப்பனவை அடியோடு இரத்துச் செய்வதில் அரசு தீர்க்கமாக இருப்பதால், இது தொடர்பான சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு மட்டுமே நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும், அதன்படி சட்டமூலத்தை அரசு நிறைவேற்றி, முன்னாள் எம்.பிகளின் மாதாந்த வருமானத்துக்கு நிரந்தர ஆப்படிக்கும் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட சிறப்பு வசதிகளை தேசிய மக்கள் சக்தி அரசு ஏற்கனவே புதிய சட்டத்தின் மூலம் ரத்து செய்திருக்கின்ற போதிலும், அவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் கை வைக்கப்படவில்லை. அது இப்போதைய நிலையில் தொடரும் என்றே தெரிகின்றது.

பாவம் முன்னாள் எம்.பிக்கள். இதுவரை பெற்று வந்த சலுகைக் கொடுப்பனவுகளின்றி அவர்கள் அந்தரிக்கப் போகின்றார்கள்.

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 ஈச்சமோட்டை கடற்கரை வீதி 32B எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படு கின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு யோ. சத்தியநாதன் முகதாவில் 2007.04.25 ம் திகதி 1569 ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் "புளியடியிற்புலமும் புங் கடியிற் கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும் எனவும் மறுபெயர் வழங்கும் புதுத்தோட்டம்" எனும் பெயர்கொண்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 03.54 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை எனும் இடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திரன் என்பவர் குறித்த ஆதனம் தனது பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை எனது பேரனும் பின்னர் நானுமாக கடந்த 47 வருடங்களிற்கு மேலாக பேணிப் பராமரித்து ஆட்சி செய்து வருகிறோம் எனவும் வெளிப்படுத் தியுள்ளார்.

மேலும் குறித்த வெளிப்படுத்தலில் ஆதன அட்ட வணையில் விபரிக்கப்படும் ஆதனம் எனது காலஞ்சென்ற தகப்பனாரின் முதுசமாகும். கந்தையா என்பவர் 35 வருடங்களாக ஆட்சிசெய்து வந்தார். அவருடன் சேர்ந்து நானும் 12 வருடங்கள் ஆட்சி செய்தேன் என்றும் இவை இரண்டு ஆட்சியும் சேர்ந்து 47வருடங்கள் ஆட்சிசெய்துள் ளோம் என்றும் அவ்வாத னத்தில் கிணறும் வீட்டிற்கான கட்டிட அத்திவாரமும் கட்டியுள்ளேன் என்றும் இவ்வாத னத்தில் வைத்து வரும் வருமானங்களில் ஆதனத்தின் வேலிகளை அடைத்து வருகின்றோம் என்றும் இக்காணி யில் நான் செய்துகொண்டுவந்த ஆட்சி மூலமும் எனக்கு பூரண சொந்தமாய் இருக்கின்றது. எனவும் வெளிப் படுத்தியுள்ளார். மேலும் 1992ம் ஆண்டு தொடக்கம் 12 வருடங்களாக தங்குதடையற்ற சுயாதீனமான ஆட்சி செய்து வருவதாகவும் தெரிவித் துள்ளார்.

அதன் பின்னர் சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திர மும் பெண் ராகினியும் பிரசித்த நொத் தாரிசு யோ.சத்திய நாதன் முகதாவில் 25.04.2007 திகதி 1570 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் ஈச்சமோட்டை யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சூசையப்பு றெமிங்ரனும் பெண் ஸ்பௌதினா வும் என்பவர்களுக்கு அதே அளவுகொண்ட ஆத னத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

சூசையப்பு றெமிங்ரனும் ஸ்பௌதினாவும் என்பர்கள் பிரசித்த நொத்தாரிசு எஸ் பி.அமரசிங்க முகதாவில் 2013.06. 04 ம் திகதி 9233 ம் இலக்கத் தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமிங்ரன் என்பவருக்கு 11.31 பேச்சஸ் அளவு கொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

மேலும் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2017.02.07 ம் திகதி 6828 ம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி மூலம் அலெக்சான்டர் ஆன் மேரி கிறிஸ்ரி என்பவருக்கு நிலப் பரப்பு 1 குளி 02.02 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதியாக நிறைவேற் றியுள்ளார்.

அதன் பின்னர் அலெக்சாண்டர் ஆன் மேரி கிறிஸ்ரி தற்போது ஞானப்பிரகாசம் சுலக்சனும் பெண் ஆன் மேரி கிறிஸ்ரியும் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2021.02.18ம் திகதி 13065 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவருக்கு அதே விஸ்தீரணம் அளவு கொண்ட ஆத னத்தை அறுதியளித்துள்ளார்.

அடுத்து அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா (றெமின்ரன் மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ். செலஸ்ரின் முகதாவில் 2021.03.15ம் திகதி 906ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு நிலப்பரப்பு 00.குளி 10.50 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நன்கொடை யளித்துள்ளார்.

மேலும் அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா (றெமின்ரன்மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.செலஸ்ரின் முகதாவில் 2023.08.08 ம் திகதி 1239 ம் இலக்கத்தில் நிறைவேறிய திருத்தல் உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு குளி 10.5 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு திருத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப் பாணப்பகுதி சுண்டுக்குளி, கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "புதுத்தோட்டம்" என்ற "புளியடியிற் தோட்டம் புங்கடியிற்கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 02.02 ஆகும் . ஆனால் தற்போது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்களால் 12.03.2021ம் திகதி 0127 ம்இலக்கத்தில் தயாரிக் கப்பட்ட படத்தின் படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 3 ஆகும். இதில் தெற்குப்பக்கமாக துண்டு 2 எனக்காட் டப்பட்ட நிலப்பரப்பு 00. குளி 10.50 விஸ்தீருணமுடைய பகுதியாகும். இந்த நிலப்பரப்பு 00 குளி 10.50 இற்கும் எல்லைகள்

கிழக்கு - கடற்கரை வீதி
வடக்கு - மேற்குறித்த படத்தில் துண்டு 1 என காட்டப்பட்ட பகுதி
மேற்கு - மடுத்ததீன் சின்னப்பிற்குரிய ஆதனம்
தெற்கு - ஒழுங்கை

இதனடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும். இவ்வாதனமானது J/66 கிராம சேவையாளர் பிரிவிலும் யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பிரிவிலும் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளும் அமைந்துள்ளது.

தற்போது இவ்வாதனத்தை யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் பெண் தர்சிகாவும் என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித் துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோன் கரன்ஸ்கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் பெண் தர்சிகாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்**

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 19 அனாதை விடுதி வீதி 22/2 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயிலு சிவகுருவின் உரிமையாளர் ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு ரி.எம். அந்தோனிப்பிள்ளை முகதாவில் 2004.08.09 ம் திகதி 2269 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "புங்கடியிற்புலம் குளி 13 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதி 6 ம் எனும் இடத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரி பாலசந்திரனும் பாலக்குகநாதன் பொன்னம்பலமும், ஞானாம்பிகை பொன்னம்பலமும், கணேசானந்தன் பொன்னம்பலமும் ஆகியோர் குறித்த ஆதனம் யாழ்மாவட்டம் ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த மரியதாஸ் ஜோன் பிலிப்பும் பெண் நசேந்தினியும் ஆகியோருக்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளனர். அதன் பின்னர் மரியதாஸ் யோன் பிலிப்பும் பெண் நசேந்தினியும் பிரசித்த நொத்தாரிசு ஜெ.எஸ்.ஏ. மதுரநாயகம் முகதாவில் 14.03.2012 ம் திகதி 437ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் புங்கன்குளம் வீதி இல 22 ஐ சேர்ந்த நித்தியானந்தன் பிரசாந்தன் பெண் யசோதரா என்பவர்க ளுக்கு அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

நித்தியானந்தன் பிரசாந்தனும் பெண் யசோதராவும் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 2015.05.11 ம் திகதி 3907 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்ரியாம்பிள்ளை டெய்சிராணி என்பவருக்கு அதே அளவு கொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் பாசையூர் புதுக்குடியிருப்பு இல 14 ஐ சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை கைம்பெண் டெய்சிராணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2017.04.04 ம் திகதி 7075 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் அவரது மகள் சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி என்பவருக்கு நிலப்பரப்பு குளி 13 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி, கோவிற்பற்று சிவியாதெரு இறை "புங்கடியிற்புலம்" உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்கள் 2004.06.15 ம் திகதியில் துண்டு 1-6 எனப்பிரிவிட்டு வரைந்த 473ம் இலக்கப்படத்தின் படி விஸ்தீரணம் நிலபரப்பு 10 குளி 13 இதில் துண்டு 3 எனும்பாகம் விஸ்தீரணம் குளி 13 ம் அதற்குச்சேர்ந்தவைகளும்

கிழக்கு - குறித்த படத்தில் துண்டு 4 எனும் பாகம்
வடக்கு - குறித்த படத்தில் துண்டு 2 எனும் பாகம்
மேற்கு- கையொழுங்கை
தெற்கு - குறித்த படத்தில் துண்டு 5 எனும் பாகம்.

இதனடங்கலும் தற்போது இவ்வாதனத்தை சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி என்பவர் தனது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் இவ்வாதனத்திற்கு பெயர் மாற்றம் முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிலுவைராஜ் அல்போன்ஸ் பெண் மேரிசயந்தினி எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்**




# உள்ளூராட்சி மகளிர் உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு நுவரெலியா மாவட்டத்தில்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

'ஜனனி' வேலைத் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கான செயலமர்வு கடந்த 14 ஆந் திகதி நுவரெலியா 'கோப் ஹொலிடே ஹோம்' வளாகத்தில் இடம்பெற்றது.

பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்ட செயலமர்வில் நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் முதன்மை எழுத்தாளர் டபுள்யூ. திசாநாயக்க, முகாமைத்துவ சேவை அலுவலர் சமீர பண்டார, 'கபே' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன், ஐசுநுளு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, ஒருங்கிணைப்பாளர் அஹில்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.











# அரசுக்கு எதிரான நுகேகொடைப் பேரணி: ரவிக்கு இன்னும் அழைப்பு வரவில்லையாம்

அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் பங்கேற்குமாறு தனக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கூட்டணிக்கு கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக ரவி கருணாநாயக்க நாடாளுமன்றம் வந்தார்.

அந்தக் கட்சியின் உரித்து ரவி கருணாநாயக்க வசம் இருப்பதால் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றைத் தனதாக்கிக்கொண்டார். இதனால் அவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் உள்ளக மோதல் ஏற்பட்டது.

எனினும், ரவி கருணாநாயக்க தன்னை இன்னும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகவே அடையாளப்படுத்தி வருகின்றார். ஆனால், கட்சிக்குள் உள்ள சிலர் தனக்கு எதிராகச் சதி செய்கின்றனர் எனவும், உள்ளகக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அரசுக்கு எதிரான நுகேகொடைப் பேரணிக்கு என்னை அழைக்காவிட்டாலும், எதிரணிகள் செல்ல வேண்டும் எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.




# ஒன்பது மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு!

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி முதல் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, மொனராகலை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.



# சீனாவில் மேலுமொரு தூதரகம் அமைக்கின்றது இலங்கை அரசு

## வெளிவிவகார அமைச்சர் தகவல்

சீனாவில் மேலுமொரு தூதரகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் இருந்து அதிகளவு வெளிநாட்டுப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதற்கமைய 2026 ஆரம்பத்தில் சீனாவின் செங்டு நகரில் மேற்படி கொன்சல் ஜெனரல் அலுவலகம் அமையும் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “சீனாவில் சில நகரங்களில் இலங்கையின் கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்நிலையிலேயே புதிய அலுவலகம் அமைகின்றது.

அதேபோல் பிரேசிலிலும் கொன்சல் ஜெனரல் அலுவலகம் மீள திறக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.” – என்றார்.



# பாடசாலையில் வைத்து 14 வயது மாணவியை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியருக்கு மறியல்!

## மூடிமறைக்க முயற்சித்த அதிபருக்குப் பிணை

மொரட்டுவை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் ஆசிரியரை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மொரட்டுவை நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

14 வயதுடைய மாணவியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த ஆசிரியரும், அதனை மூடிமறைக்க முயற்சித்த அதிபரும் மொரட்டுவை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

பதுரெலிய மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 58 மற்றும் 59 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர்.

இருவரும் நேற்று மொரட்டுவை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அதிபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஆசிரியர் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சொகுசு வாகனங்களின் இறக்குமதி அதிகரிப்பு

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனப் பதிவுத் தரவுகள் அடங்கிய அண்மைய அறிக்கையின்படி, நாட்டில் சொகுசு வாகன இறக்குமதி உயர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்படி நாட்டில் சமீபத்திய சொகுசு உயர் ரக வாகன இறக்குமதியில் Mercedes-Benz முதலிடத்தில் உள்ளது.

இதற்கமைய மொத்தமாக 28 புதிய Mercedes-Benz வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 போர்ஷேக்கள், 4 பென்ட்லிகள் மற்றும் ஒரு லம்போர்கினி ஆகிய வாகனங்களும் இதில் உள்ளடங்குகின்றது.

அத்துடன் பயன்படுத்தப்பட்ட வாகன பிரிவின் முன்னணியிலும் Mercedes-Benz உள்ளது.

மொத்தம் 54 pre-owned Benz வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் 18 C-Class, 13 E-Class, 1 S-Class மற்றும் 12 GLB மொடல்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பிற சொகுசு வாகனப் பிரிவுகளில் யுரனை வாகனங்கள் 37 பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக A3 மொடல்கள் 28 இடம்பெற்றுள்ளன.

அத்துடன் Lexus வாகனங்கள் 15 பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், BMW வாகனங்கள் 17 பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொத்த வாகனப் பதிவுகள் 380 ஆக இருந்தபோது, அதில் பெரும்பாலானவை ரூ. 5 மில்லியனுக்கும் குறைவான விலையில் விற்கப்படும் BAW (263) மற்றும் Wuling (79) வாகனங்களாகும்.

இந்தநிலையில் மொத்தமாக 4,025 மின்சார வாகனங்கள் (EVs) பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய 115 மின்சார SUV வாகனங்கள் (EVs) பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் GAC - 46 மற்றும் Changan – 30 வாகனங்கள் அடங்கும்.

BYD வாகனங்கள் 27 பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் ATTO-2 மொடல் மட்டும் 19 உள்ளது.

இருசக்கர மின்சார வாகனப் பதிவுகள் 3,478 ஆகும்.

இதில் லுயனநய வாகனங்கள் 1,799 ஆக இருந்து ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்தநிலையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் அரசாங்கத்தின் வருவாய் 154.5 பில்லிய ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதில் 63.6 வீதம் வாகன இறக்குமதியிலிருந்து வந்த வருவாய் என மதிப்பிடப்படுகிறது.

இதற்கமைய செப்டெம்பர் மாதத்தில் சொகுசு வாகன இறக்குமதி மூலம் அரசாங்கத்திற்கு 98 பில்லியன் ரூபா வரி வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அடையாளம் தெரியாத ஆணின் சடலம் சிலாபம் பாடசாலைக்கு அருகில் மீட்பு!

சிலாபத்தில் பாடசாலை ஒன்றுக்கு அருகில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் சுமார் 50 முதல் 55 வயதுடையவர் எனவும், சுமார் 05 அடி 7 அங்குல உயரம் கொண்ட மெல்லிய உடல் அமைப்பைக் கொண்டவர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், குட்டையான, வெள்ளை தலைமுடி கொண்டவர் எனவும், முகம் முழுவதும் தாடி உள்ளது எனவும், 'ஹிதுமதே ஜீவீத்' எனக் கைதியை பச்சை குத்தியுள்ளார் எனவும் பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்ட இந்தச் சடலத்தில் காயங்கள் எதுவும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் தரவுக் கட்டமைப்பில் மாற்றங்கள்

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை முறையாக செயற்படுத்தும் வகையில் தரவு கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் வழிவகைகள் பற்றிய குழுவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரிச் சலுகைத் திட்டம், அதன் நடைமுறைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க தலைமையில் கூடிய 'வழிவகைகள் பற்றிய குழுவில்' விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அஸ்வெசும திட்டத்திற்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் குறித்து குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அந்த அளவுகோல்களின் அடிப்படையில் பொருத்தமான சலுகைகளை வழங்குவதற்குத் தகுதியான பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் காணப்படும் சிக்கல்கள் குறித்து குழுவின் உறுப்பினர்கள் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இத்திட்டத்தில் 22 அளவுகோல்களின் கீழ் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவதால், அந்த அளவுகோல்களைச் செயற்படுத்துவதற்கான வழிமுறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று குழு சுட்டிக்காட்டியது.

அஸ்வெசும நன்மைகளைப் பெறுவதற்காக மட்டுமே பயனாளிகளைப் பதிவுசெய்யத் தற்பொழுது அனுமதிக்கப்பட்டாலும், இது போதாது எனவும் நாடு முழுவதுமுள்ள மக்கள் அனைவரும் தமது தகவல்களைக் கட்டமைப்பொன்றில் பதிவுசெய்வதே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

இவ்வாறு பதிவுசெய்த பின்னரே, மக்களுக்கு என்ன தேவை என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்து, அதன் மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்றும் குழு குறிப்பிட்டது.

முதியோர் மற்றும் இயலாமையுடைய நபர்களுக்கு அஸ்வெசும திட்டத்தை அவர்களின் வீடுகளுக்கே சென்று பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் குழு விரிவாகக் கலந்துரையாடியது.

தேசிய அடையாள அட்டை இல்லாததால் நலன்புரித் திட்டத்தின் உதவிகளைப் பெற முடியாத தகுதியுள்ள நபர்கள் தற்போது உள்ளனர் என்று அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

அதன்படி, முடிந்தவரை அவர்களின் அடையாளங்களை உறுதி செய்வதன் மூலம் நலன்புரித் திட்ட உதவிகளை வழங்குவதன் நோக்கத்தை அடைவதன் முக்கியத்துவத்தையும் குழு வலியுறுத்தியது.







# அரசின் பங்களாக்களில் அரசியல்வாதிகள் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

அரசிடமுள்ள எந்தவொரு பங்களாக்களும் அரசியல்வாதிகளின் பாவனைக்காக வழங்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவரும் அரசாங்கம் திரைமறைவில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசின் பங்களாக்களை வழங்கியுள்ளதா? என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ,

“கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் வரை அமைச்சர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் வசமுள்ள 32 பங்களாக்களை பயன்படுத்தி வந்தனர்.

அவற்றில் 6 பங்களாக்கள் தற்போது, வாடகை அடிப்படையில் தற்காலிகமாக பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ளன.




அந்த பங்களாக்களில் நீதிமன்றங்களை நிறுவுவதற்காக நீதியமைச்சுக்கு நான்கும், காவல்துறை, குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு ஒன்றும், கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு ஒன்றும் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன்,மாதிவல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பு வளாகத்தில் 120 குடியிருப்பு உள்ளதுடன், அவற்றில்

111 குடியிருப்புகள் தற்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் மேலும் 7 குடியிருப்புகள் அவற்றுக்கான சேவை வழங்கலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, மாதிவல குடியிருப்பு வளாகத்தில் போதிய குடியிருப்புகள் இல்லாமையினால் 2010 ஆண்டு முதல் லோரிஸ் வீடமைப்பு திட்டத்தில் 20 வீட்டு அலகுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாவனைக்காக பெறப்பட்டிருந்தன.

அவற்றில் 6 வீட்டுக்கு அலகுகள் பிரதியமைச்சர்களுக்கும் ஒரு வீடு சபாநாயகருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே இந்த குடியிருப்புகளை தவிர வேறு எந்தவொரு அரச பங்களாக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது அரசியல்வாதிகளுக்கோ வாடகைக்கோ அல்லது வேறெந்த அடிப்படையிலோ வழங்கப்படவில்லை.

இது குறித்து திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் ஊடகமொன்றில் வெளிவந்துள்ளது. அது முற்றிலும் பொய்யானது.”- என்றார்.



# ஒரு வருட உத்தரவாதத்துடன் மாணவர்களுக்கு காலணிகள்

புதிய பாடசாலை வவுச்சர் திட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கை புடவை மற்றும் ஆடை கைத்தொழில் நிறுவகத்தின் மேற்பார்வையின் கீழ் தரத்தை உறுதிசெய்து, ஓராண்டு உத்தரவாதத்துடன் கூடிய பாதணிகளை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு வழங்கவுள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு இணைந்து தொடங்கிய இந்த முயற்சி, 250 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 251-500 மாணவர்களைக் கொண்ட தோட்டப் பாடசாலைகள், விசேட தேவையுடைய பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் நாடாளுமன்றக் குழு அறையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து விவாதித்தனர்.

உற்பத்தியாளர்கள் பாதணிகளை நேரடியாகப் பாடசாலைகளுக்கு விற்பனை செய்யவுள்ளதால், மாணவர்கள் சரியான அளவில் பொருந்தக்கூடிய பாதணிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் இந்த முன்னோடித் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன் சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பிறகு, இந்தத் திட்டம் ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலக ஜெயசுந்தர மற்றும் ஏனைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# பாடல்பெற்ற சிவஸ்தலங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவதுதான் அரசின் இன, மத நல்லிணக்கமா?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



திருகோணமலையிலும் திருக்கோணேஸ்வரத்திலும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் தமிழர்களின் மத வழிபாட்டு உணர்வுகளையும் சிதைக்கும் வகையில் அங்கு சட்டத்திற்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய புத்தர் சிலைகளும் அந்தப் பகுதியை பௌத்தமயமாக்கும் செயற்பாடுகளும் நாட்டின் வளர்ச்சிக்கும் இன ஐக்கியத்திற்கும் ஒருபோதும் பங்களிக்காது என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், சில தினங்களாக திருகோணமலையில் இடம்பெற்றுவரும் புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கும் மேலான பழமை வாய்ந்த நாயன்மாரின் தேவாரப் பாடல் பெற்ற புனிதத் தலமாக விளங்குகின்ற திருகோணேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தைச் சுற்றிவளைத்து புத்தர் சிலைகளை நிர்மாணிப்பதுடன், பௌத்த நிறுவனங்களை உருவாக்குகின்ற வேலைகளையும் மாறிமாறி வருகின்ற அனைத்து சிங்கள அரசுகளும் மேற்கொண்டு வருகின்றன.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மையப்புள்ளியான திருகோணமலையை சுற்றிவளைத்து ஏற்னவே சேருவாவில என்ற பெயரில் சிங்களத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. மிச்சம் மீதியாக இருக்கின்ற தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்களமயமாக்குவதனூடாக வடக்கிற்கும் கிழக்கிற்குமான நிலத்தொடர்ச்சியை இல்லாமல் செய்வதென்பது ஒவ்வொரு அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் பல தமிழ் கிராமங்கள் முற்றுமுழுதாக சிங்கள கிராமங்களாக மாற்றப்பட்டமையுடன், இப்பொழுதும் தமிழ், முஸ்லிம் வாழக்கூடிய பிரதேசங்களில் பௌத்த புராதன இடங்கள் என்ற பெயரில் புத்தகோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக தமது இறந்துபோன உறவுகளுக்கு ஈமக்கிரியைகள் செய்யுமிடமான கன்னியா வெந்நீரூற்று என்ற புராதன பகுதியானது பௌத்த பிக்குகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, அதனை அவர்களே நிர்வகிக்கிப்பதையும் அங்கிருக்கின்ற சைவக் கோயில்களை இடித்தழிக்கும் நிலையையும் காணமுடிகின்றது. இலங்கையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தன என வரலாறு சொல்கின்றது.

திருகோணமலையில் திருகோணேஸ்வரமும், மன்னாரில் திருக்கேதீஸ்வரமும் பாடல்பெற்ற தலங்களாக இருந்து வருகின்றன. மன்னார் திருக்கேதீஸ்வர முகப்பிலும் தனியார் ஒருவரின் காணியை ஆக்கிரமித்து அங்கு புத்த கோயில் கட்டப்பட்டுள்ளது. அதனைப் போன்றே திருக்கோணேஸ்வரர் கோயிலை அண்மித்த பகுதிகளிலும் புத்தர் சிலைகளாலும் ஏற்கனவே கூறியது போன்று, பௌத்த நிறுவனங்களாலும் அது ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

மிக நீண்டகால வரலாற்றைக் கொண்ட இந்த சிவாலயங்கள் புனிதப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட வேண்டுமென தமிழ் மக்கள் கோரிக்கைகளை முன்வைத்து வரும் வேளையில் அந்த இடங்களை ஆக்கிரமித்து வேறு மத சின்னங்களை உருவாக்குவதென்பது தமிழ் சைவ மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதுடன் அவர்களின் உணர்வுகளுக்கு விரோதமான செயற்பாடாகும். புராதன சின்னங்களை, பகுதிகளை பாதுகாக்க வேண்டிய அரசாங்கங்கள் அவற்றை அழித்தொழித்து அங்கு புதிய புத்தர் ஆலயங்களை உருவாக்குவதென்பது அறிவீனமானது. வரலாற்றை சீர்குலைக்கும் நோக்கத்தையும் கொண்டது. இன்று வந்திருக்கின்ற புதிய இடதுசாரி அரசாங்கத்தினால் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாது என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியிலும் கட்டியெழுப்பப்பட்டது.

நாங்கள் இனவாதிகள் அல்லர், மதவாதிகள் அல்லத் என்று இவர்கள் மீண்டும் மீண்டும் மந்திரம்போல் ஓதி வருகின்றார்கள். ஆனால் இனவாதத்தையும் மதவாதத்தையும் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவே இவர்களும் இருக்கின்றனர். அத்துடன் அதற்குத் துணைபோகின்றவர்களாகவும் இவர்கள் இருக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸவும் ஏனைய பல சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை பௌத்தநாடு, பௌத்தத்திற்கு முதலிடம் உண்டு, ஆகவே இவற்றுக்கெதிராக பொலிஸாரோ, படையினரோ, அரசாங்கமோ நடவடிக்கைகள் எடுக்கக்கூடாதென நாடாளுமன்றத்தில் கூக்குரலிட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு என்பது தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசம். இங்கு 80வீதத்திற்கு மேற்பட்டோர் தமிழ் பேசும் மக்களாகவும் இந்து, இஸ்லாமிய, கிறித்தவ மக்களாகவும் வாழ்கின்றனர். ஆகவே வடக்கு-கிழக்கிலும் பௌத்தத்திற்கு முதலிடம் வேண்டும் என்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூற்றுகளும் முற்றுமுழுதாக மதவாதத்தையும் இனவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டவை.

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களின் தனித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களது மத, இன, கலாசார, பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால், குறைந்தபட்சம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் மதச்சார்பற்ற பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். ஒட்டுமொத்தமான இன ஐக்கியத்திற்கும் மத நல்லிணக்கத்திற்கும் இது ஒரு முன்னோடி செயலாக அமையும்.

தேர்தல் காலங்களில் தமிழ், முஸ்லிம் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆட்சிக்கு வந்தால் அனைத்தையும் செய்வோம் என்று கூறுவதும், ஆட்சிக்கு வந்த பின்னர் கடைந்தெடுத்த இனவாத, மதவாதிகளாகச் செயற்படுவதும் அருவருக்கத் தக்க செயலாக நீண்டு செலின்றது.

இவை மாற்றி அமைக்கப்பட வேண்டுமாக இருந்தால், சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய முற்போக்கு சக்திகள், இன, மத ஐக்கியத்தை விரும்பக்கூடியவர்கள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களை மதச்சார்பற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஜயன் வந்தபொழுது இந்த மண்ணில் நிலைகொண்டிருந்த ஈஸ்வரங்களை புனிதத்தலங்களாகப் பிரகடனப்படுத்துவதும் முக்கியமானதென நாங்கள் கருதுகின்றோம்.

நாங்கள் இனவாதிகள் அல்லர், மதவாதிகள் அல்லர் என்ற முகமூடியைப் போர்த்திக்கொண்டு சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான அநுர அரசாங்கத்தின் திட்டங்களானவை அருவருக்கத்தக்கவையும் கண்டிக்கத்தக்கவையுமாகும்.

வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலுமாகநாம்முழுமக்களின்ஆணையைப் பெற்றுக்கொண்டுள்ளோம் என்று கூறிக்கொள்பவர்கள், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமாக 159 ஆசனங்களைக் கொண்டிருப்பவர்கள், துணிச்சலான முடிவுகளை எடுத்து, இனவாத மதவாதப் போக்குகளிலிருந்து விடுபட்டு இன, மத ஐக்கியத்தை உருவாக்க முன்வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்று உள்ளது.

# அரசாங்கங்களின் ஆட்சி ஆக 5 ஆண்டுகளேதான் ஆனால் பௌத்தத்தின் உரிமை 2,000 ஆண்டுகள்

## திருகோணமலையில் ஞானசார தேரர் சண்டப்பிரசண்டம்

திருகோணமலைப் பகுதியில் புத்தர் சிலை நிறுவப்பட்டமையால் ஏற்பட்ட பதற்றங்களைத் தொடர்ந்து, பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

ஞானசார தேரர் அங்குச் செய்தியாளர்களிடம் பேசுகையில் பொலிஸாரின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்தார். பொலிஸ் அதிகாரிகள் பௌத்த சமூகம் மற்றும் விகாரையின் நடவடிக்கைகளுக்கு மரியாதைக் குறைவான முறையில் நடந்த. கொண்டனர் என அவர் குற்றம் சாட்டினார்.

புத்தருக்கு சொந்தமான இலங்கை பூமியில்தான் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழுகின்றனர். பௌத்த மக்களின் உரிமையில்தான் நீங்கள் கை வைத்துள்ளீர்கள். இது பௌத்த மதத்தின் உரிமையை கேள்விக்குறியாக்குகிறது. பௌத்த மதம் என்பது பல ஆண்டுகளாக இலங்கையில் உள்ள ஒரு மதமாகும்.



புத்தர் சிலையை அகற்றுமாறு கலவரம் செய்தவர்களால் தாக்கப்பட்ட பல தேரர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேரர்களை தாக்கும் காணொலிகள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. இது மிகவும் தவறாகும்.

பௌத்த வணக்கஸ்தலத்தை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுவதற்கு யாருக்கு உரிமை உள்ளது? மக்களைத் தூண்டுவது அரசாங்கம்தான். கால காலமாக அரசாங்கம் மாறினாலும் பௌத்த மக்களின் உரிமை மாறாது.

5 வருடங்களுக்கு தான் அரசாங்கத்துக்கு பலம் கிடைக்கும். ஆனால் பௌத்த மதத்தின் உரிமை 2 ஆயிரம் ஆண்டுகளாக இலங்கையில் உள்ளது. அது எப்போதும் மாறாது. இதுவே கடைசி. இது போன்ற செயல்கள் இனி இடம்பெறக் கூடாது. இவ்வாறான பாவ செயல்களில் ஈடுபட வேண்டாம். இது விகாரைக்கு சொந்தமான இடம். அங்கு என்ன செய்ய வேண்டும் என்பது விகாரா திபதியின் உரிமை. – என்றார் அவர்.

# மக்களின் மனநிலை தேர்தல் காலத்தில் மாறக் கூடியது என்பதை உணருங்கள்!

## ஊடக சந்திப்பில் திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு

**( மஸ்கெலியா நிருபர் )**

மக்களின் மனநிலை அரசியல் ரீதியில் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூற முடியாது. குறிப்பாக தேர்தல் காலத்தில் அவர்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படும் என்பதை கடந்த கால அனுபவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் குடாகம ஆர்கில் விருந்தகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். இது வரையில் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டதில்லை. தேசிய மக்கள் சக்தி தலைவர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதை அறிவித்துள்ளமை போல, அடுத்த ஆண்டில் அதனைச் சரியான முறையில் அமுல்படுத்தி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

வாவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது யாரும் சொல்லி நான் வாக்களிக்கவில்லை. தோட்டத்தில் பிறந்து வளர்ந்து அந்த மக்களின் கஷ்ட நஷ்டங்களை அறிந்து உணர்ந்தவன் என்ற அடிப்படையில் உணர்வுப் பூர்வமாக சிந்தித்து



எனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளேன். அதே நேரம் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது போல, மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களுக்கு நிச்சயமாக எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

அரசியல் ரீதியில் மக்கள் எப்போதும் ஒரே மன முலையில் இருக்க மாட்டார்கள் என்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கை சிறந்த உதாரணம் ஆகும். நாட்டில் முப்பது வருடங்களுக்கு மேலாக நிலவி வந்த யுத்தத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. சுதந்திரமாக, நிம்மதியாக பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. வெயிலோ, மழையோ குளிரோ எதுவாக இருந்தாலும் சோதனைச் சாவடியில் இறக்கப்பட்டு அடையாள அட்டை சோதிக்கப்பட்ட பின்னரே செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட அந்த அனுபவத்தை நாம் மறந்து விட முடியாது.

அத்தகைய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை ம/ஹந்த ராஜபக்ஷவைச் சாரும். அதனால், அவரை யுத்த வீரன் என்றும், காவல் தெய்வம் என்றும் பெரும்பான்மை மக்கள் கொண்டாடினார்கள். எனினும்,யுத்தத்தை வெற்றி கொண்ட அந்த மாவீரனை 2015 ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தோற்கடித்திருந்தார்கள். மீண்டும் 2019 இல் வாய்ப்பு தந்து 2025 தோற்கடித்தார்கள். அதே மக்கள் 2022 இல் ஓடி ஒளியும் அளவுக்கு அவரை விரட்டியடித்தார்கள். யுத்த காலத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்து ஜனாதிபதியாக வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ்வுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது.

எனவே, மக்களின் மன நிலை எப்போதும் ஒரே மாதிரியாகவும், ஒரே நிலையிலும் இருக்காது என்பதை அரசியல் வாதிகள் புரிந்து கொண்டு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். இன்று போற்றுகின்றவர்கள் நாளை தூற்றலாம். அது எல்லா அரசியல் வாதிகளுக்கும் எல்லா காலத்துக்கும் பொருந்தும். எனவே, அரசியல் என்பது காலத்துக்குக் காலம் மாறக் கூடியது என்பதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும். – என்றார்.



# மட்டக்களப்பில் முதல் தடவையாக நடந்த விவசாய ஆராய்ச்சி மாநாடு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்குப் பல்கலைக்கழகமும், விவசாயத்திணைக்களமும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்முறையாக விவசாய ஆராய்ச்சி மாநாடு ஒன்றை சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று நடத்தின.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விசாய ஆராய்ச்சி மாநாடு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீட பீடாதிபதி திருமதி. புனிதா பிரேமானந்தராஜா மற்றும் விவசாய திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் ஆகியோர்களின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனூடாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்தினால் மேற்கொள்ளப்படும் விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் அதன் முடிவுகள் பல்கலைக்கழக வளாகத்தோடு நின்று விடாமல் அவை விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் விவசாயிகளை நேரடியாக சென்றடைய வழி செய்யப்பட்டுளது என்றும், விவசாயிகள் அதிக விளைச்சல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் வருடாந்தம் இம்மாநாடு நடாத்தப் படவுள்ளது என்றுக்ம் விவசாயத் திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் பரமேஸ்வரன் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் கருத்து வெளியிடுகையில், இம்மாவட்டத்தில் விவசாயம் சார் பிரச்சினைகள் எதிர் கொள்ளும்போது கள ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகைளை முன்வைக்கும் பணிகளை மேற்கொண்டு வந்த கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி, உபவேந்தர், சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு நன்றி பாராட்டினார்.

மேலும் அனுபவம் மற்றும் திறமையுடைய எமது விவசாயிகளையும், சகல வளங்களையும் கொண்ட எமது மாவட்டத்தில் அமைச்சுக்கள், திணைக்களங்களூடாகக் கிடைக்கும் நிதியைச முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்தில் தன்னிறைவு கொண்ட மாவட்டமாக திகழமுடியும் எனவும், நெல், மறுவயல் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பிலும் சிறப்புத் தேர்ச்சி பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்மாநாட்டின் திட்ட இணைப்பாளர் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர். ரீ. கிரிதரனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கமநல திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே. ஜெகன்நாத், இத்திட்டத்திற்கு நிதிப்பங்களிப்பை வழங்கும் கொமர்சல் வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் ஆர். கஜரூபன், அதன் அபிவிருத்தி கடன்பிரிவு முகாமையாளர் டபில்யூ. பீ.ரீ. லசந்த, கிழக்கப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள், விவசாய திணைக்கள போதனாசிரியர்கள், விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு இயந்திரப் படகு நேற்றைய தினம் வழங்கல்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு இயந்திர படகு வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் அதிகளவு வெள்ளப்பெருக்கு பாதிப்பு ஏற்படும் பிரதேசமான கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு அக்ஷன் யுனிட்டி லங்கா (AU Lanka) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் கே. கஜன் தலைமையில் நியூசிலாந்து நாட்டுக்கான Child fund நிறுவன திட்ட முகாமையாளர் மற்பௌலரினால் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்திடம் இயந்திரப் படகு மற்றும் உயிர்பாதுகாப்பு மிதவை மேலங்கிகள் கோரகல்லிமடு பிரதேச செயலாளர் விடுதியில்வைத்து நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

வெள்ள நீர் பாதிப்பினால் இப்பிரதேச மக்களின் தரைவழி தொடர்பு தூண்டிக்கப்படுகின்றமையினால் நகர் பிரதேசத்திற்கான பயணத்தை மேற்கொள்வதற்கு இவ்இயந்திர படகுகள் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று உதவி பிரதேச செயலாளர் திருமதி லோஜினி, திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கே.சுகுணதாஸ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சிவநேசராஜா, ஊானை கரனெ ஸ்ரீலங்கா சிரேஸ்ட முகாமையாளர் ஏ.அர்ச்சுதன், கள முகாமையாளர் கே.சக்திஸ்வரன், நிகழ்சி திட்ட முகாமையாளர் ஞா.சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.








# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சிலாபம் ஆராச்சிக்கட்டுவவில் ஒருவர் கைது!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்ததாக சந்தேக நபர் ஒருவர் சிலாபம் ஆராச்சிகட்டுவ பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சோதனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்டது.

நல்லதரங்கட்டுவ – பன்குலாவ பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர் ஒரு தச்சுத் தொழிலாளி என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை பொலிஸார் கண்டுபிடித்தனர். சந்தேக நபர் துப்பாக்கியை வைத்திருந்ததற்கான காரணம் இன்னும் தெரிய வரவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் துப்பாக்கியுடன் சிலாபம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

ஆரம்ராச்சிகட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பில் முகத்துவாரத்தை வெட்டி வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கை

**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரதான கடலுக்குள் வெள்ள நீர்வெளியேற்றச் செய்யும் பிரதான பகுதியான மட்டக்களப்பு முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ளநீர் வெளியேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தாழ்நிலங்களில் உள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. படுவான்கரைப்பகுதிக்கு செல்லும் பிரதான பாலத்தின் ஊடாகவும் வெள்ளநீர் பாயும் நிலைமை காணப்படுகின்றது.

கொக்கட்டிச்சோலை பகுதிக்கு செல்லும் மண்முனைப்பாலம்,வவுணதீவு பிரதேசத்திற்கு செல்லும் வலையிறவு பாலம் ஆகியவற்றின் ஊடாக வெள்ளநீர் பாயும் நிலைமை காணப்பட்டது.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகளவான வயல்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டிருந்த நிலையில் இது தொடர்பில் விவசாய அமைப்புகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து நேற்று மாலை முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ளநீர் வெளியேற்றத் தீர்மானம் எடுக்கப்பட்டு அது தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

இந்த நிலையில் நேற்றைய தினம் முழுமையாக முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ள நீர் வெளியேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதனை பார்வையிடுவதற்காக பெருமளவான பொது மக்கள்ள அப்பகுதிக்கு படையெடுத்தமையைக் காணமுடிந்தது.

முகத்துவாரத்தினை அண்மித்த பகுதிகளில் பெருமளவான மீனவர்களும் மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமையையும் காணமுடிகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு முகத்துவாரம் வெட்டும் செயற்பாட்டுக்கு பிரதேசத்தில் உள்ள மீனவர் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# கௌதம புத்தர் சிங்கள ஆதிக்கத்தை தமிழ் மண்ணில் நிறுவுவதற்கான கருவியா?

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டனம்

கௌதம புத்தர் சிங்கள இனவெறி ஆதிக்கத்தை தமிழ் மண்ணில் நிறுவுவதற்கான கருவியா என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவுனர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஈழமண்ணில் திருகோணமலை பகுதியில் நவம்பர் 16 அன்று புத்தர் சிலை ஒன்றை சிங்களப் பௌத்த பிக்குகள் நிறுவியுள்ளனர். அப்பகுதியைச் சார்ந்த தமிழ்மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவுடன் பொலிஸார் அதனை அப்புறப்படுத்தியுள்ளனர். ஆனால், இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் புத்தர் சிலையை அப்புறப்படுத்திய நடவடிக்கையைக் கண்டித்ததுடன், உடனே அதனை அங்கே நிறுவிட வேண்டுமென கொக்கரித்துள்ளனர். அதனையடுத்து மீண்டும் அதேசிலையை அதே இடத்தில் நிறுவியுள்ளனர். இடதுசாரி பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களென காட்டிக் கொள்ளும் ஜே.வி.பி. அரசு , வழக்கமான ‘சிங்கள பேரினவாத அரசு’ தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது. இந்த அடாவடி ஆதிக்கப் போக்கை விடுதலைச்சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழர்களின் தாயகமான ஈழமண்ணில் கலாச்சார படையெடுப்பை நடத்தும் ஒரு வடிவமாக ஆங்காங்கே புத்தர் சிலைகளை நிறுவும் நடவடிக்கைகளில் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்மண்ணை சிங்களமயப் படுத்துவதையும் பௌத்தமயப்படுத்துவதையும் ஒரு செயல்திட்டமாக வரையறுத்துத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். வலதுசாரிகள் மட்டுமின்றி இடதுசாரிகளும் அதனைத் தொடரும் நிலை உள்ளது. இதன்மூலம், அதிபர் அநுர திசநாயகவும் கடந்தகால அதிபர்களைப் போலவே இலங்கை தீவைச் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியதாக நம்புகிறார் என அறியமுடிகிறது. இதற்கு அவர்களின் அரசமைப்புச் சட்டம் தான் வழிவகுக்கிறது.

சிங்கள – பௌத்த –பெரும்பான்மை வாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒற்றை ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டதாகவும், தமிழினத்தை ஒடுக்குவதற்கான பேரினவாதக் கூறுகளைக் கொண்டதாகவும் அரசமைப்புச் சட்டம் இருப்பதே இதற்கு காரணமாகும்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் அரசு விரைவில் புதியதொரு அரசமைப்புச் சட்டத்தை யாத்திட திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், தமிழ்மக்களின் நலன் கருதி இலங்கை தேசத்துக்கான ஆட்சி நிர்வாகத்தில் ‘கூட்டாட்சி’ (சமஷ்டி) நிர்வாக முறையை அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

ஏற்கனவே, தமிழர்களின் தரப்பாக நின்று இந்திய ஒன்றிய அரசு, ‘இந்திய –இலங்கை ஒப்பந்தந்தை’ ஏற்படுத்திய வரலாறு உள்ளது. இன்னும் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திட வேண்டுமென சிங்கள ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டிய ‘தார்மீகப் பொறுப்பு’ இந்திய ஆட்சியாளர்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அந்த வகையில், புதிய அரசியல் யாப்பில் தமிழ்த் தேசிய இனத்துக்கான முழுமுற்றான ‘தன்னாட்சி அதிகாரத்தை’ வழங்குவதற்குரிய வாய்ப்பை உருவாக்கிட வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

தமிழ் மக்கள் பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழ் மக்களின் ஒரு சாரார் கடந்த காலங்களில் பௌத்த மதத்தைச் சார்ந்தும் வாழ்ந்தார்கள். தமிழில் உள்ள மணிமேகலை, குண்டலகேசி போன்ற காப்பியங்கள் இதற்கான சான்றுகள் ஆகும். ஆனால், கௌதம புத்தரின் போதனைகளுக்கு எதிராக, பௌத்த தம்மத்துக்கு முற்றிலும் விரோதமாக, கௌதம புத்தரையே இழிவுபடுத்துவதுபோன்று தமிழர்களை ஆக்கிரமிக்கும் ஒரு கருவியாக பௌத்தத்தைப் பயன்படுத்துவதையே தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

அண்மையில், நான் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்தபோது ஈழத்தின் கள நிலையை என்னால் உணர முடிந்தது. யுத்தத்தின்போது நேரடியாகவே இனவழிப்பு செய்யப்பட்ட தமிழ் மக்கள், இப்போதும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் திட்டமிடப்பட்ட வகையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைமையின்கீழ் தமிழ் மக்கள் ஒருபோதும் நிம்மதியாக வாழமுடியாது.

எனவே, புதிய அரசமைப்பில் தமிழர்களுக்கான இறைமையுடன் கூடிய ‘சமஷ்டியை’ உறுதி செய்வதே இத்தகைய ஆக்கிரமிப்புகளிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் அவர்களை விடுதலை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# சபரிமலையில் கடும் கூட்ட நெரிசல்: மாரடைப்பால் மூதாட்டி உயிரிழப்பு

சபரிமலையில் ஏற்பட்டுள்ள கடும் நெரிசலில் சிக்கி குழந்தைகள், முதியோர் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்த மூதாட்டி ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.


சபரிமலை ஐயப்பன் கோயிலில் ஆன்லைன் மூலம் 70 ஆயிரம் பேரும், "ஸ்பாட் புக்கிங்" மூலம் 20 ஆயிரம் பேரும் என மொத்தம் 90 ஆயிரம் பக்தர்கள் தினமும் அனுமதிக்கப்படுவர் என்று தேவசம் போர்டு தெரிவித்துள்ளது.

ஆனால் "ஸ்பாட் புக்கிங்கில்" கட்டுப்பாடின்றி பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் நெரிசல் ஏற்பட்டு பம்பை, மரக்கூடம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் பக்தர்கள் வெகுநேரம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்பு அனுமதிக்கப்படுகின்றனர். 6 மணி நேரத்துக்கும் மேல் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது. அது வரை குடிநீர், கழிப்பிட வசதி இல்லாததால் பக்தர்கள் பெரும் பரிதவிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இத்துடன் கடும் நெரிசலும் ஏற்படுவதால் பலருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் கட்டுங்கடங்காத கூட்டத்தால் அப்பாச்சிமேடு பகுதியில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். பொலிஸார் உடலை மீட்டு விசாரணை நடத்தினர். இதில் இறந்தவர் கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே கோகிலாண்டி பகுதியைச் சேர்ந்த சதி (வயது 58) என்பது தெரியவந்தது. அவர் மாரடைப்பினால் இறந்ததாக மருத்துவத் துறையினர் தெரிவித்தனர்.

கடும் நெரிசலால் குழந்தைகளும், முதியோர்களும் அதிக சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இதனால் பக்தர்கள் பலரும் சபரிமலை செல்லாமல் பம்பா கணபதி கோயிலுடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.






# வியட்நாமில் தொடரும் சீரற்ற காலநிலை; பஸ் மீது கற்பாறை வீழ்ந்ததால் 6 பேர் பலி

வியட்நாமில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் பஸ் மீது கற்பாறைகள் வீழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 19 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

32 பயணிகளுடன் சென்ற பஸ் மீது பாறைகள் வீழ்ந்ததால் பஸ்ஸின் முன்பகுதி நசுங்கியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டதால், பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கத் தாமதமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







# அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ; தீப்பரவல் அதிகரிக்கும் அபாயம்

அவுஸ்திரேலியாவின், நியூ சௌத் வேல்ஸ் தெற்கு கடற்கரைக்கு காட்டுத்தீ எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாஞ்சுரி பொயிண்டிற்கு வடக்கே, தி வூல் வீதியின் தெற்கிலும், லார்மர் அவென்யூவின் மேற்கு மற்றும் கிழக்கிலும் கட்டுப்பாட்டை மீறி எரியும் காட்டுத்தீ மற்றும் வெப்பம், காற்று வீசும் சூழ்நிலையால் மோசமடைந்ததைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஞாழயடாயளநக்கு கிழக்கே 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள றுழசசழறபைெ உநடைாவளஜ சுற்றி உள்ளவர்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வெளியேறுவது மிகவும் ஆபத்தானது என்று பயமுறுத்தும் எச்சரிக்கை வந்தது.

இரவு 8 மணியளவில் குறைக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் சட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், தீ கட்டுப்பாட்டை இழந்தாலும், தீயணைப்பு வீரர்களின் தொடர்ச்சியான முயற்சிகளால் தொடர் தீப்பரவல் கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், NSW கிராமப்புற தீயணைப்பு சேவையானது, ‘எச்சரிக்கையாக இருங்கள் மற்றும் உங்கள் சுற்றுப்புறங்களைக் கண்காணிக்கவும்’ என்று அறிவுறுத்தியது.

அத்துடன் ‘வெப்பமான மற்றும் வறண்ட சூழ்நிலைகள், மேற்கு, முதல், தென்மேற்கு வரையிலான புதிய மற்றும் பலத்த காற்றுடன் இணைந்து கிரேட்டர் ஹண்டர் மாவட்டத்திற்கு தீவிர தீ ஆபத்தை ஏற்படுத்தும்’ என்று NSW Incidents Alerts தெரிவித்துள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள்- 19.11.2025




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகினால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும். கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கையான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஒய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 19.11.2025




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப் பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற் குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத் துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல் திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத் துக் கொள்ளுங்கள். இன்று அமைதி யாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.

# அரசாங்கம் சொல்வது போல் அடிமையாக வாயை மூடி இருக்க நாங்கள் தயாரில்லை

## காட்டமாகக் கூறுகின்றார் ஜோசப் ஸ்டாலின்

**(கி.வசந்தன்)**

அரசாங்கம் சொல்வது போல் 2027 வரை அடிமையாக வாயை மூடி இருக்க நாம் தயாரில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வரவு – செலவுத் திட்டம் மற்றும் கல்வி சீர்திருத்தம் என்பன தற்போதைய காலகட்டத்தில் மிக முக்கியமானவை. வரவு – செலவு திட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்தோம். 1997 ஆம் ஆண்டில் இருந்து சம்பள முரண்பாடு உள்ளது. அதற்காக நாம் பல போராட்டங்களை செய்தோம். அந்த போராட்டத்தின் விளைவாக தான் சுபோதினி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது

அந்த குழு சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு யோசனை முன்வைத்தது. அதற்கு அமைவாக அதில் மூன்றில்



ஒரு பகுதியை கொடுப்பதாக அப்போதைய அரசாங்கம் தீர்மானித்து 2022 ஆம் ஆண்டு இது வழங்கப்பட்டது.

அடுத்த இரண்டு கட்டத்தை பெறுவதற்காக 2024 இல் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். அந்தப் போராட்டத்தில் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் உட்பட அதிபர், ஆசிரியர்கள் 23 பேர் உள்ளனர். அவர்களும் இணைந்து போராடினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன்னாள் பெரிய போராட்டம் செய்தோம். அந்த போராட்டத்தில் தலைமையில் இருந்தவர்கள்தான் தற்போது அரசாங்கத்தில் உள்ளனர்.

மூன்றில் இரண்டு சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

அதிபர், ஆசிரியர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்களுக்கு 2027 வரை சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளோம், அதற்காக 33 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம் என தெரிவித்துள்ளார். ஆகவே 2027 வரை சம்பளத்தைப் பற்றியோ சம்பள முரண்பாடு பற்றியோ பேச முடியாது.

அரசாங்கம் சொல்வது போல் 2027 வரை அடிமையாக வாயை மூடி இருக்க நாம் தயாரில்லை. சம்பள முரண்பாடுகளை தீர்க்க வேண்டும்.

ரணில் அரசாங்கம் கட்டம் கட்டமாக தருவதாக கூறிய போதும் நாம் போராடினோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் அது பற்றி வாய் திறக்கவில்லை. எனவே நாம் சம்பள அதிகரிப்புக்காக போராட வேண்டும்.

எதிர்வரும் டிசம்பர் 12 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். – எனத் தெரிவித்தார்.